**<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>**
<u>MCOP No: 42/2022</u>

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | யுவராஜ் |
| த.க.பெயர் | கிட்டுசாமி |
| கிராமம் | அனுமன்பள்ளி |
| மாவட்டம் | |
| வயது | 46 |

**<u>ம.சா. 2 நாள் 23.01.2026</u>**

**<u>முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் வழக்கின் மனுதாரர்கள் தரப்பு சாட்சி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

<u>குறுக்கு விசாரணை (4 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

விபத்தில் இறந்த மோகன் என் மைத்துனர். மனுதாரர்கள் கேட்டுக் கொண்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. போலிசார் விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். போலிசார் தாக்கல் செய்த இறுதியறிக்கை நீதிமன்றத்தில முன்னிலைபடுத்தப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. விபத்து சேலம்-கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் பெருந்துறைக்கு பிரியும் சாலையில் மேம்பாலத்தின் கீழ் நடைபெற்றது என்றால் சரிதான். நான் திருப்பூர் சென்று விட்டு திரும்ப வந்து கொண்டிருந்தேன். விபத்தில் இறந்த மோகன் எனக்கு முன்பாக வந்து கொண்டிருந்தார். அவரை நான் கடைசியாக திருப்பூரில் பார்த்தேன். விபத்திற்கு முன்பு அவர் தனியாக இரு சக்கர வாகனத்திலும் நான் தனியாகவும் வந்தோம். மோகன் திருப்பூருக்கு காலையிலேயே சென்று விட்டார், நான் மதியம் சென்றேன்.

நான் விபத்தை பார்க்கவில்லை என்றும் வழக்கிற்காக விபத்தை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மோகன் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி மாதம் ரூ.22000 சம்பாத்தியம் செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் மோகன் சம்பாத்தியம் எதுவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக மனுதாரர்கள் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு உதவுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.01.23 17:51:42 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS